# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



09.02.2026 நிகழ்வுகள்

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்குத் "தனித் தகுதி" பதவி உயர்வு வழங்கும் கொள்கை செயல்படுத்தப்படாதது ஏன்?

**ஆ. இராசா**



பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (DoPT) அலுவலககுறிப்பாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மத்திய நேரடி வரிகள் வாரிய அலுவலகத்திலும் அதன் 18 கேடர் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடமும், பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்குத் தகுதியுடன் கூடிய பணிமூப்பு அடிப்படையில் "தனித் தகுதி" பதவி உயர்வு வழங்கும் கொள்கை செயல்படுத்தப்படாதது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா என்றும் துறையில் "தனித் தகுதி" பதவி உயர்வுகள் செயல்படுத்தப்படாததால் 10,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் அவற்றை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிரப்ப அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

### 2. மாசுக் கட்டுப்பாடு குறித்த தீவிர ஆய்வு நடத்துக!

**கலாநிதி வீராசாமி**



2011 ஆம் ஆண்டு முதல் கடந்த பத்தாண்டுகளில், சீனா நகர்ப்புறங்களில் PM2.5 அளவை 32 சதவீதம் வரையிலும், உலக அளவில் சுமார் 10 சதவீதம் வரையிலும் கணிசமாகக் குறைத்துள்ளது, ஆனால் இதே காலகட்டத்தில் இந்தியாவின் சராசரி அளவு வெறும் 0.4 சதவீதம் மட்டுமே மாறியுள்ளது என்பது உண்மையா?

சமீபத்திய கண்காணிப்புத் தரவுகளின் படி, நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை மையங்களில் தற்போதைய காற்று மாசுபாட்டின் அளவுகள் (PM2.5, PM10, NO, SO) என்ன? விதிமுறைகள் இருந்தபோதிலும், பல நகரங்களில் காற்று மாசுபாட்டின் அளவுகள் தேசிய சுற்றுப்புறக் காற்றுத் தரநிலைகளுக்கு மேல் தொடர்ந்து இருப்பதற்கான காரணங்கள் என்ன? மாசுபடுத்தும் தொழில்களுக்கான சட்டத்தின்கீழ் உள்ள அபராத விதிகள், கடந்த மூன்று ஆண்டுகளில் விதிமுறைகளை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்ட தொழில்கள் மற்றும் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை என்ன? குறிப்பாக டெல்லி-என்சிஆர், மும்பை, பெங்களூரு, சென்னை மற்றும் கடுமையான மாசுபாட்டை எதிர்கொள்ளும் பிற நகர்ப்புறங்களில் காற்று மாசுபாட்டைக் குறைக்க அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### 3. தமிழ்நாட்டிலுள்ள அரசு ஐடிஐ-க்களை நவீனமயமாக்குவதற்கான திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

**காஞ்சிபுரம் ஜி.செல்வம்**

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை**





மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழில்துறைக்கு ஏற்ற பாடத்திட்டத்துடன் 1,000 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை (ஐடிஐ) நவீனமயமாக்குவதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட பிஎம்-சேது திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர். பிஎம்-சேது திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஐடிஐ-க்களின் எண்ணிக்கை என்ன? இந்த நவீனமயமாக்கல் முயற்சிகளின் விளைவாக, மாணவர்கள் பெறும் மேம்படுத்தப்பட்ட வேலை மற்றும் தொழில் வாய்ப்புகள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கூறிய மற்றும் அது தொடர்பான பிற திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஐடிஐ-க்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் என்ன?

### 4. தமிழ்நாட்டில் பிஎம்-உஷா திட்டத்தை முறையாக செயல்படுத்துக!

**காஞ்சிபுரம் ஜி.செல்வம்**

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை**

கடந்த மூன்று ஆண்டுகளில் பிஎம்-உஷா திட்டத்தின்கீழ் ஆதரவளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட மாநிலத்தின் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் யாவை? பிஎம்-உஷா திட்டத்தின் தலையீடுகள் இருந்தபோதிலும், ஆசிரியர்கள், ஆராய்ச்சி ஆய்வகங்கள், டிஜிட்டல் கற்றல் வசதிகள் மற்றும் மாணவர் ஆதரவு சேவைகளில் தொடர்ந்து நீடிக்கும் போதாமைகளை தீர்க்க வழிமுறைகள் என்ன? மாநிலத்தில் பிஎம்-உஷா ஆதரவு பெற்ற கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை, மற்றும் வேலைவாய்ப்பில் ஏற்பட்ட மேம்பாடுகள் குறித்து அரசாங்கத்தால் நடத்தபட்ட மதிப்பீட்டு ஆய்வுகள் என்ன? பிஎம்-உஷா நிதியுதவியானது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மேம்படுத்தப்பட்ட கல்வித் தரம் மற்றும் அனைவருக்கும் உயர்தர உயர்கல்விக்கான சமமான வாய்ப்பாக அமைவதை உறுதிசெய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 5. அதிக பணவீக்கக் குறியீட்டில் 60வது இடத்தில் இந்தியா?

**வேலூர் கதிர் ஆனந்த்**



பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) 2026ஆம் ஆண்டுக்கான 190 நாடுகளின் பணவீக்க முன்னறிவிப்புத் தரவுகளின்படி, இந்தியா 4.0 சதவீத பணவீக்க விகிதத்துடன் அதிக பணவீக்கக் குறியீட்டில் 60வது இடத்தில் உள்ளதை குறித்து திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார். அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு சரிவடைந்ததால், இறக்குமதி விலைகள் அதிகரித்ததா, அதன் விளைவாக தங்கம், வெள்ளி மற்றும் பிற இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் உயர்ந்தனவா என்றும் அது குறித்து அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 6. கிராமப்புற விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துக

**ஆரணி தரணிவேந்தன்**



தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள விளையாட்டு உள்கட்டமைப்பின் தற்போதைய நிலையை அறிய அரசாங்கம் நடத்திய ஆய்வுகள் என்ன என்றும் விளையாட்டு மைதானங்கள், அரங்கங்கள், உள்ளரங்கப் பயிற்சி வசதிகள் மற்றும் தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களின் இருப்பு ஆகியவற்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளின் விவரங்கள் யாவை என்றும் திமுக மக்களவை உறுப்பினர் தரணி வேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

'கேலோ இந்தியா' மற்றும் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு மாநில உதவி போன்ற திட்டங்களின்கீழ், கிராமப்புற விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி உதவியை வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா? கடந்த ஐந்து ஆண்டுகளில் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிதி பெற்ற தமிழ்நாட்டில் உள்ள கிராம பஞ்சாயத்துகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை என்ன? மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் பயிற்சியின் மூலம் கிராமப்புற இளைஞர்கள், குறிப்பாகப் பெண்கள், பட்டியல் சாதி/பழங்குடியின இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளிடையே விளையாட்டுப் பங்கேற்பை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? மத்திய நேரடி வரிகள் வாரியத்தில் பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்கு "தனித் தகுதியின்" அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்க அரசுஎடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

### 7. தர்மபுரி மாவட்டத்து இளைஞர்கள் வேலைக்காக புலம்பெயர்வதை தடுக்க உள்ளூர் வேலைவாய்ப்பை ஏற்படுத்துக!

**தர்மபுரி ஆ.மணி**



திறமையும் முறையான பயிற்சியும் பெற்றிருந்தபோதிலும், கணிசமான எண்ணிக்கையிலான திறமையான தொழிலாளர்கள் வேலையின்றி அல்லது பகுதி நேர வேலையுடன் இருந்து, வேலை தேடி மற்ற மாநிலங்களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ புலம்பெயர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.


தருமபுரி போன்ற அதிக அளவில் மக்கள் வெளியேறும் மாவட்டங்களில், திறமையான தொழிலாளர்களிடையே வேலையின்மை விகிதம் அதிகமாக உள்ளதற்கு காரணங்களை அரசு ஆராய்ந்துள்ளதா? திறன் பயிற்சிக்கும் தொழில்துறைத் தேவைக்கும் இடையிலான இடைவெளிகள், உள்ளூர் வேலைவாய்ப்புகளின் பற்றாக்குறை, பயிற்சி பெற்ற தொழிலாளர்களிடையே நிலவும் இத்தகைய தொடர்ச்சியான வேலையின்மைக்கு அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட காரணங்கள் யாவை? திறன் மேம்பாட்டு திட்டங்களை உள்ளூர் தொழில்துறைத் தேவைகளுக்கேற்ப ஒருங்கிணைக்கவும் பின்தங்கிய பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்குவதை ஊக்குவிக்கவும், பயிற்சிப் பணிகளையும் வேலை வாய்ப்பு ஆதரவையும் வலுப்படுத்தவும், திறமையான இளைஞர்களின் கட்டாயப் புலம்பெயர்வதைக் குறைக்கவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்கப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் யாவை?

### 8. சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான நிதி வழங்குவதில் தாமதம் ஏன்?

**ராஜாத்தி சல்மா**



சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பிற்காக, மாநில அரசு முன்கூட்டியே வழங்கிய 9,500 கோடியை விடுவிப்பது தொடர்பாக, தமிழ்நாடு அரசிடமிருந்து மத்திய அரசுக்கு கோரிக்கைகள் வந்தும், நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏன் என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். 2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டுகளுக்கான முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட பங்கை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கான காரணங்கள் யாவை? இரண்டாம் கட்டத் திட்டம் முழுவதையும் முடிப்பதற்கான காலக்கெடு என்ன, மேலும் முதல் செயல்பாட்டுப் பகுதி (பூந்தமல்லி முதல் போரூர் வரை) எப்போது தொடங்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது?




திருப்பத்தூர் மாவட்டம் , திருப்பத்தூர் நகர தி.மு.க. சார்பில் நகர கழக நிர்வாகிகள் , வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், நகரமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA02) , BLC , BDA, ஆலோசனைக் கூட்டம் வழக்கறிஞர்.சு.இராசேந்திரன். தலைமையில் நடைபெற்றது. திருமதி.V.சங்கீதா வெங்கடேஷ் வரவேற்புரையில், TK.மோகன் , KPR.ஜோதிராஜன், T.ரகுநாத் , D.சந்திரசேகர் , கோ.செல்வம் , V.மகாலிங்கம் , தமிழரசி இளங்கோவன் , MS. சவுத் அகமத் , ம.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட கழக செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர், தொகுதி பார்வையாளர் வேலூர்.ஜி. ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

---

மதுரை வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!



**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

**நாள் : 12.02.2026 நேரம் - மாலை 4.00 மணி**

| வ. எண் | கழக அமைப்பு – ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு, வண்டியூர் | ஸ்டேட் பேங்க் எதிரில், ஒத்தக்கடை. |
| 2. | மதுரை மேற்கு வடக்கு, கண்ணனேந்தல், திருப்பாலை, ஆனையூர். | இந்தியன் வங்கி எதிரில், கடச்சனேந்தல் ரோடு, ஊமச்சிகுளம். |
| 3. | கொட்டாம்பட்டி கிழக்கு, மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, தெற்கு | இந்தியன் வங்கி எதிரில், கருங்காலக்குடி. |
| 4. | மேலூர் மேற்கு, மேலுர் வடக்கு, அ.வள்ளாலபட்டி. | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிரில் அ.வள்ளாலபட்டி |
| 5. | மேலூர் கிழக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர். | தபால் நிலையம் எதிரில் பேங்க் ரோடு, மேலூர். |
| 6. | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் வடக்கு, பாலமேடு | ஸ்டேட் பேங்க் எதிரில், பாலமேடு. |
| 7. | அலங்காநல்லூர் மேற்கு, தெற்கு, அலங்காநல்லூர் பேரூர், மதுரை மேற்கு | ஸ்டேட் பேங்க் எதிரில், அலங்காநல்லூர். |
| 8. | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர் | ஸ்டேட் பேங்க் எதிரில், வாடிப்பட்டி |
| 9. | வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர் | ஸ்டேட் பேங்க் எதிரில், சோழவந்தான். |
| 10. | பரவை, மதுரை வடமேற்கு கோவில்பாப்பாகுடி, கூடல்நகர், விளாங்குடி, திருப்பரங்குன்றம் வடக்கு | தபால் நிலையம் எதிரில், பாரதி மைதானம், பரவை. |
| 11. | காளவாசல், பழங்காநத்தம், ஜெய்ஹிந்த்புரம், ஜீவாநகர், சோழையழகுபுரம், பைக்காரா, துரைச்சாமிநகர், பெத்தானியாபுரம், சம்பட்டிபுரம், | குரு தியேட்டர் எதிரில், அண்ணா மெயின் வீதி, பெத்தானியாபுரம். |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினருடன் இணைந்து சட்டமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அந்தந்த ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர்களில் கலந்து கொண்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**அமைச்சர் பி.மூர்த்தி**

செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

---

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், நாளை ( 12/02/2026 - வியாழக்கிழமை) திருச்சி தெற்கு மாவட்ட முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து. தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து கீழ்கண்ட மாநகர, ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் 12.02.2026-வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், பகுதி ஒன்றிய நகர பேரூர் வட்ட வார்டு கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

| வ. எண் | மாநகரம் / பகுதி / ஒன்றியம் / நகரம் / பேரூர் | தலைமை | சிறப்புரை | நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | P.M.சபியுல்லா | புத்தாநத்தம் தபால் நிலையம் |
| 2. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | N.செந்தில் | வளநாடு, கைகாட்டி, பிராம்பட்டி தபால் நிலையம் |
| 3. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | K.N.சேகரன் | வாழவந்தான்கோட்டை தபால் நிலையம் |
| 4. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | N.கோவிந்தராஜ் | செவல்பட்டி தபால் நிலையம் |
| 5. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | R.குணசேகரன் | N.பூலாம்பட்டி தபால் நிலையம் |
| 6. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | கவிஞர் சல்மா | மருங்காபுரி தபால் நிலையம் |
| 7. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | அ.த.த.செங்குட்டுவன் | வையம்பட்டி ரயில்வே ஸ்டேசன் |
| 8. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | வண்ணை அரங்கநாதன் | கிழக்குறிச்சி தபால் நிலையம் |
| 9. | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | பன்னீர் செல்வம் | வடக்கு துவாக்குடி மலை தபால் நிலையம் |
| 10. | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | M.மாரியப்பன் | திண்டுக்கல் ரோடு, மணப்பாறை தபால் நிலையம், |
| 11. | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | லீலாவேலு | துவரங்குறிச்சி தபால் நிலையம் |
| 12. | கூத்தைப்பார் பேரூர் | கே.தங்கவேல் | இரா.மூக்கன் | கூத்தைப்பார் தபால் நிலையம் |
| 13. | தெற்கு மாநகரம் | மு.மதிவாணன் | இனிகோ இருதயராஜ் | தெப்பக்குளம் தபால் நிலையம் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**

செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.